**OS.NO: 22/2025**

**PW 1 :சீனிவாசன் த/பெ.ரங்கசாமி**

நாள் : 18.02.2026

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:**

எனது பிரமாண வாக்குமூலத்தில் என்னுடைய கையொப்பத்தை அரக்கோணத்தில் தான் போட்டேன். எனது வழக்கறிஞர் முன்னிலையில் தான் நான் கையொப்பத்தை போட்டேன். அதிலுள்ள விவரங்களை படித்து பார்த்து விட்டு கையொப்பம் போட்டேன். கிரைய ஒப்பந்தத்தில் கிரைய தொகையாக ரூ.99,82,000/– குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் ரூ.20,00,000/– நான் முன்தொகையாக RTGS–ல் லோகநாதனின் வங்கி கணக்கிற்கு அனுப்பினேன். கிரைய ஒப்பந்தத்தை Document writer தான் தயார் செய்தார். கிரைய ஒப்பந்தத்திலுள்ள விவரங்கள் எந்த அடிப்படையில் தயார் செய்யப்பட்டது என்றால் தொகை, காலக்கெடு, சொத்து விவரம் ஆகியவற்றை மட்டும் நான் கூறினேன். நான் M.Sc., படித்துள்ளேன். கிரைய ஒப்பந்தத்தில் கிரைய முன்தொகை ரூ.20,00,000/– ரொக்கமாக கொடுக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் முன்தொகை சம்மந்தமாக கூறிய விவரங்கள் கிரைய ஒப்பந்தத்துக்கு எதிராக உள்ளதால் கிரைய ஒப்பந்தம் செல்லத்தக்க ஆவணம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. பத்திர எழுத்தாளர் கிரைய ஒப்பந்தத்தில் ரொக்கமாக கொடுத்ததாக எழுதிவிட்டார். RTGS மூலமாக ரூ.20,00,000/– பிரதிவாதிக்கு அனுப்பிய பிறகு தான் பிரதிவாதி கிரைய ஒப்பந்தத்தில் கையொப்பம் இட்டார். மேற்படி RTGS மூலமாக அனுப்பிய ரூ.20,00,000/– பிரதிவாதி என்னிடம் வாங்கிய கடன் தொகை என்று சொன்னால் சரியல்ல. அந்த கடனைக் கொடுக்கும் போது நான் ரூ.50/– வெற்று பத்திர தாளிலும் மற்ற பேப்பர்களிலும் பிரதிவாதியின் கையொப்பத்தை பெற்றுக் கொண்டேன் என்று சொன்னால் சரியல்ல. அந்த கடன் தொகைக்காக பிரதிவாதியால் எழுதி கொடுக்கப்பட்ட நிரப்பப்படாத பத்திர தாள்களையும் மற்ற ஆவணங்களையும் இந்த வழக்கிற்காக பயன்படுத்தி கொண்டேன் என்று சொன்னால் சரியல்ல. அவ்வாறு தயார் செய்யப்பட்ட ஆவணம் தான் கிரைய ஒப்பந்த ஆவணம் என்று சொன்னால் சரியல்ல. வா.த.ஆ.6–னுடைய அசல் ஆவணம் என் வசம் தான் உள்ளது. வா.த.ஆ.6 கிரைய ஆவணம் 13.07.2022 அன்று எழுதப்பட்டது. வா.த.ஆ.1ன் படி நான் பிரதிவாதிக்கு ரூ.79,82,000/– கிரைய பாக்கி செலுத்த வேண்டும். வா.த.ஆ.6–ல் என்னுடைய கையொப்பம் மட்டும் தான் உள்ளது என்று சொன்னால் சரிதான். வா.த.ஆ.6–ல் 4வது பக்கத்தில் கிரைய தொகை ரூ.80,00,000/– என்று குறிப்பிடப்பட்டுள்ள என்று சொன்னால் சரிதான். அதில் ரூ.20,00,000/– போக மீதம் ரூ.59,20,000/– சொல்லப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். மேலும் TDS தொகையாக ரூ.80,000/– பிடித்துள்ளதா என்றால் சரிதான். பிரதிவாதிக்கு பதில் நானாகவே TDS தொகை செலுத்துவதாக ஏதாவது ஆவணம் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வா.த.ஆ.1க்கும் வா.த.ஆ.6க்கும் இடைப்பட்ட நாள் ஒரு நாள் என்று சொன்னால் சரிதான். வா.த.ஆ.1க்கு பிறகு கிரைய தொகையை மாற்றம் செய்து ஏதாவது ஒப்பந்தம் நானும் பிரதிவாதியும் போட்டுக் கொண்டோமா என்றால் இல்லை. வா.த.ஆ.10ல் கிரைய தொகை ரூ99,82,000/– என்று

சொல்லப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். ஆனால் என்னால் தயார் செய்து தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.த.ஆ.6ல் கிரைய தொகை ரூ.80,00,000/- என்று மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். வா.த.ஆ.10ல் சொத்தை என்னுடைய பெயருக்கு எழுதிக் கொடுக்குமாறு அல்லது நான் கொடுத்த முன்தொகையை திருப்பிக் கொடுக்குமாறு கூறியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். வா.த.ஆ.1ல் காலக்கெடு 15 நாட்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். 2023ம் ஆண்டு ஏப்ரல் மாதம் வழக்கறிஞர் அறிவிப்பை அனுப்பினேன் என்று சொன்னால் சரிதான். நான் வா.த.ஆ.1ன் படி ரூ.99,82,000/-ல் முன் தொகையான ரூ.20,00,000/- மிச்சம் போக ரூ.79,82,000/- 15 நாட்களுக்குள் பிரதிவாதியிடம் செலுத்தி கிரைய ஆவணம் செய்து கொள்ள நான் முன்வரவில்லை என்று சொன்னால் சரியல்ல. வா.த.ஆ.6ன் படி மீதம் கிரைய தொகையாக நான் ரூ.59,20,000/- தான் தருவேன் என்று கூறியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். நான் தான் வா.த.ஆ.1க்கு முரனாக நடந்து கொண்டேன் என்று சொன்னால் சரியல்ல. நான் நீதிமன்றத்தில் மட்டும் தான் சத்திய பிரமாண வாக்குமூலத்தை செய்கிறேன் என்று சொன்னால் சரிதான். என்னுடைய சத்திய பிரமாண வாக்குமூலம் செல்லத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. நான் பிராதில் கோரியுள்ள ஏற்றுதலை ஆற்றுதல் பரிகாரத்தை ஏற்க தகுதியற்றவர் என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை:-**

வா.த.ஆ.1ல் குறிப்பிடப்பட்டுள்ள கிரைய தொகைக்கும் வா.த.ஆ.6ல் குறிப்பிடப்பட்டுள்ள கிரைய தொகைக்கும் காரணம் என்ன என்று கேட்டால் பிரதிவாதி ஆரம்பத்திலிருந்தே அவர் என்னிடம் பணத்தை ரொக்கமாக கேட்டார். கிரைய ஒப்பந்தத்தில் நான் ரூ.20,00,000/- ரொக்கமாக கொடுத்ததாக சொல்லப்பட்டுள்ளது. ஆனால் நான் கிரைய முன்தொகையை RTGS-ல் தான் அனுப்பியதாக கூறுகிறேன். அவ்வாறு இருக்கையில் கிரைய ஒப்பந்தத்திலும் RTGS-ல் செலுத்தியதாக குறிப்பிடாமல் ரொக்கமாக செலுத்தியதாக குறிப்பிட்டுள்ளதற்கு காரணம் பத்திர எழுத்தர் எழுதியதை நான் நம்பிக்கையின் பேரில் தான் கையொப்பம் இட்டேன்.

**குறுக்கு விசாரணை:-**

நான் வழக்கிற்காக வேண்டி மறுவிசாரணையிலும் பிரமாண வாக்குமூலத்திலும் மாறாக சாட்சி அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

Jayamangalam Sudhakaran

II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2026.02.18 17:51:54 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.